**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - පෙබරවාරි 2022**

**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் – பெப்ரவரி 2022**

**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – February - 2022**

## Geography භූගෝල විද්‍යාව புவியியல்
## (GGYE 302 – Regional Geography, பிரதேசப் புவியியல்)

කාලය පැය (03) තුනයි.
**மூன்று (03) மணித்தியாலங்கள்**
Time three **(03)** Hours.

ප්‍රශ්න 04 ට පිළිතුරු සපයන්න'
**04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
Answer any 04 questions only.

Two sketch world maps are provided
இரண்டு உலக புறவுருவப்படங்கள் இத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**
Marks will be deducted for illegible handwriting.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 08 කි
**இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன.**
There are 08 questions in the question paper.

---

1. (அ) பிரதேசம் ஒன்றின் நான்கு (04) பண்புகளை பெயரிட்டு, உலகின் ஏதாவதொரு பிரதேசத்தினை மேற்குறிப்பிட்ட பண்புகளில் கவனம் செலுத்தி சுருக்கமாக விவரிக்குக. — 05 புள்ளிகள்

   (ஆ) பிரதேசங்கள் பற்றி கற்பதன் முக்கியத்துவத்தினை விளக்குக. — 10 புள்ளிகள்

   (இ) இலங்கையினுள் அடையாளம் காணப்பட்ட முறையான பிரதேசங்கள் எவை மற்றும் அவை ஏன் முறையான பிரதேசங்கள் என அழைக்கப்படுகின்றன? — 10 புள்ளிகள்

2. உலகின் பிரதான பிரதேசங்களைக் குறித்துப் பெயரிட்டு, அவற்றில் நான்கு (04) பிரதேசங்களின் தனித்துவமான பண்புகளைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக. — 25 புள்ளிகள்

3. 'ஐரோப்பாவானது அதன் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் ஒரு தனிப் பிரதேசமாக அடையாளம் காணப்பட்டாலும், அது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக ஒருமைப்பாட்டைக் கொண்டுள்ளதன் காரணமாக அதனை ஒரு தனிப் பிரதேசமாகக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்.' பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக. — 25 புள்ளிகள்

4. (அ) தரப்பட்டுள்ள உலக புறவுருவப்படத்தில் வட ஆப்பிரிக்கா மற்றும் வட மேற்கு ஆசியாவிலிருந்து தலா ஐந்து (05) நாடுகளைக் குறித்துப் பெயரிடுக. — 05 புள்ளிகள்

   (ஆ) இப்பகுதியினை ஒரு தனிப்பிரதேசமாக உருவாக்கிய அடிப்படை காரணிகளைக் கலந்துரையாடுக. — 20 புள்ளிகள்

5. (அ) ‘பிரதேசங்கள் இயங்குதன்மை/மாறும்தன்மை கொண்டவை’. இக்கூற்றை உதாரணங்களுடன் கலந்துரையாடுக. 10 புள்ளிகள்

(ஆ) பிரதேசங்களின் மாற்றங்களைத் தூண்டும் காரணிகளைக் கலந்துரையாடுக. 15 புள்ளிகள்

6. உலகில் ஒரு முக்கியமான பொருளாதார சக்தியாக கிழக்காசியாவின் நிலைப்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக. 25 புள்ளிகள்

7. தெற்காசியாவிலுள்ள சில நாடுகளின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைக்கு காலனித்துவம் ஒரு முக்கிய காரணமாகும். பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றை பகுப்பாய்வு செய்க. 25 புள்ளிகள்

8. கீழே பட்டியலிடப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் **இரண்டிற்கு (02)** சிறு குறிப்பு எழுதுக. 25 புள்ளிகள்

(அ) இலத்தின் அமெரிக்காவில் காடழிப்பு மற்றும் பல்தேசிய நிறுவனங்கள்

(ஆ) உப-சஹாரா ஆப்பிரிக்காவில் வறுமை மற்றும் காலநிலை மாற்றம்

(இ) பனிப்போர், ரஷ்யா மற்றும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள்

(ஈ) அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து மற்றும் தென் பசுபிக் தீவுகளில் இடப்பெயர்வு, உலகமயமாக்கம் மற்றும் கலாசார பன்முகத்தன்மை.